# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.

## அ.சா. 12(LW13)

| **பெயர்** | பாலசுப்பிரமணியன் | **தொழில்** | |
|---|---|---|---|
| **தகப்பனார் பெயர்** | சின்னழகர் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **07.03.2024** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

2ஆம் எதிரி ஆஜர்.

1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் திண்டுக்கல் மாவட்ட துப்பறியும் மோப்ப நாய் பிரிவில் பணிபுரிந்து வந்த போது கடந்த 14.06.2021 ஆம் தேதி அன்று மாவட்ட காவல் துறை காண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து வந்த அழைப்பின் படி மோப்ப நாய் ரூபியை அழைத்துக்கொண்டு அவரிடம் பணிக்கு அறிக்கை செய்து, அவர் கூறிய படி அன்று மாலை சுமார் 5.00 முதல் 6.00 மணியளவில் சிலுவத்தூர், மாலப்பட்டி பிரிவில் கருப்பையா என்பருடைய பிரேதம் இருந்ததாக கூறப்பட்ட இடத்தில் உறைந்து கிடந்த இரத்ததின் மீது மோப்ப நாய் ரூபி மோப்பமிட்ட இடத்தில் இருந்து மோப்ப நாய் மாலப்பட்டி பிரிவு வரை வந்து மீண்டும் திரும்பி சிலுவத்தூர் ரோடு வழியாக சுமார் 700மீ ஓடி அந்த ரோட்டில் உள்ள கோகுல் வெல்டிங் கடை முன்பாக சென்று மோப்ப நாய் நின்று விட்டது. யாரையும் கவ்வி பிடிக்கவில்லை. இதனை அறிக்கையாக எழுதி ஆய்வாளரிடம் சமர்ப்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.03.08 10:41:32 +0530

Additional District Judge,

Dindigul.